முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1316

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.05.2023, ஞாயிற்றுக்கிழமை

1. உயிர்காக்கும் மகா சூட்சுமத்தை
   உலகோர்க்கு ஞானமாக அருளுகின்ற
   தயவுமிக்க ஆறுமுக அரங்கனே
   தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 24ம் நாள், 07.05.2023, ஞாயிற்றுக்கிழமை)
   வழங்குவேன் சோபகிருது தகர்திங்கள் தன்னில்
   உயர்வான ஞானவழிகாட்டும் அரங்கன்
   உண்மைநெறிதான் உலகை காப்பாற்றும்
3. காப்பாற்றும் மகாசக்தி சூட்சுமத்தை
   கண்டுத்தேறி உலகோர் ஞானபெற
   ஒப்புகொண்டு அரங்கன் குடில்நோக்கி
   ஓங்கார நாமஜெபதபம் போற்றி
4. போற்றியே அணுகி வரவேணும்
   புண்ணிய வழிகாட்டும் அரங்கனே
   ஆற்றல்மிக்க தர்மத்தை ஏற்று
   அனைவரும் அன்னதானம் செய்யவேண்டும்
5. வேண்டி இந்த வழிமுறைகளை
   விடாது உலகோர் பின்பற்றினால்
   தொண்டு என்கின்ற மகாசூட்சுமம் மூலம்
   தேசமெங்கும் அரங்கன் ஆசியாலே
6. ஆசியாலே ஞானவான்கள் படைகளும்
   அளவில்லா பெருகி உலகமெங்கிலும்
   வாசிவென்ற மக்களாக அனைவருமே
   வள்ளல்தன்மை கூடி அரங்கன்வழி

7. வழிவழி ஞானிகளாக தேறி நிற்பர்
வையகத்தில் ஞானவான்கள் சூழ்ந்த நல்ல
அழிவில்லா ஞானிகள் ஆட்சியாக
ஆறுமுகன்என் தலைமைகொண்ட மாற்றமாக உலகம் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே
–சுபம்–